# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் வணிக மாத இதழ்

Volume: 12 | Issue : 08 | NOVEMBER 2023 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE








SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

**மெட்ரோ ஷூ மார்ட்**

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

**Sri Balameenakshi Aqua Pumps**

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317
B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems






Prop.: B.S. Rajan

- CCTV Camera
- Long Distance Monitor
- Security Alarm
- Digital Video Recorder
- Voice Records
- Access Control System
- Firm Alarm
- Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

**A TO Z CCTV SYSTEMS**

CCTV Camera Exclusive Showroom

*Head Office :*
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

**உங்கள் உடல்
எடையை பராமரிக்க
குறைக்க / அதிகரிக்க
விரும்புகிறீர்களா?**

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

**ஆலோசனை பெற அணுகவும்**

**L.N.R. தாமோதரன் - 98431 71477**



# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெஃகோ மொன்னு பொறெ*

**நமஸ்கார்...**

T.R.மோகன்ராம்
தலைவர்

நாம் அனைவரும் தீபாவளி கொண்டாட்டத்தின் மகிழ்ச்சியிலிருந்து அன்றாட பணிக்குத் திரும்பியுள்ள நிலையில் மற்றுமொரு மகிழ்ச்சியான செய்தியை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

மதுரை – பெங்களூரு இடையே பகல் நேர ரயில் சேவை வேண்டி கடந்த 2014 முதல் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், ஒவ்வொரு முறையும், மத்திய அரசுக்கும், அரசு அதிகாரிகள் & அமைச்சர்களுக்கு மனு அளிக்கும்போது குறிப்பிட்டு எழுதியுள்ளது. இது தற்போது வந்தே பாரத் ரயில் சேவை மூலம் நிறைவேறப்போகிறது.

மதுரை – சென்னை இடையேயான வந்தே பாரத் சேவை, மதுரையிலிருந்து புறப்படும் என்று பலராலும் கருதியது ஏமாற்றம் அளித்தாலும், தற்போது மதுரையிலிருந்து – பெங்களூரு செல்ல வந்தே பாரத் சேவை துவங்கப்போகிறது என்ற பத்திரிக்கை செய்தி மகிழ்ச்சியையும் அளித்துள்ளது.

நாளிதழில் வந்த செய்தி யாதெனில்,

“மதுரையிலிருந்து பெங்களூருக்கு பகல் நேரத்தில் செல்லும் வகையில் வந்தே பாரத் ரயில் இயக்கப்பட உள்ளதால் ரயில்வே ஸ்டேஷனில் பெட்டி பராமரிப்பிற்கான பணிகள் நடந்து வருகின்றன.

பெங்களூருக்கு மதுரையில் இருந்து நேரடி ரயில் இல்லை. மதுரை வழியாக நாகர்கோவில் – பெங்களூரு, தூத்துக்குடி – மைசூரு எக்ஸ்பிரஸ் ரயில்கள் மட்டும் இரவில் இயக்கப்பட்டு வருகின்றன. பல நாட்களுக்கு முன்பே முன்பதிவு செய்தால் மட்டுமே இவற்றில் இடம் கிடைக்கும் நிலை உள்ளது.

இந்த குறையைப் போக்கும் விதமாக மதுரை – பெங்களூரு இடையே வந்தே பாரத் ரயில் இயக்கப்பட உள்ளது. மதுரை, திண்டுக்கல், கரூர், நாமக்கல், சேலம், ஓசூர் வழியாக பெங்களூரு எஸ்.எம்.வி.டி. ரயில்வே ஸ்டேஷன் வரை இயக்கப்பட உள்ளதாகவும், இது குறித்து தெற்கு ரயில்வே விரைவில் அறிவிப்பு வெளியிடும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தினர்” என்று கூறப்பட்டுள்ளது.

இந்த செய்தி தென் தமிழக மக்களுக்கு குறிப்பாக மதுரை மற்றும் மதுரையை சுற்றியுள்ளவர்களுக்கும், பட்டதாரி இளைஞர்கள், தொழில்நுட்பத் துறையில் பணிபுரிபவர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். நமது சேம்பர்-ன் நீண்ட நாள் கோரிக்கையும் நிறைவேறியுள்ளது என்று நிச்சயமாகக் கூறலாம்.


SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS YEAR 2022-2024

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| T.R. Mohanram | President | 93441 01432 |
| Kumaran B. Jaghuva | Imm. Past President | 99949 26348 |
| K.K. Dinesh | Vice President | 98421 16461 |
| K.K. Kubendran | General Secretary | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | Treasurer | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Joint Secretary | 94439 30728 |
| T.R. Saravanan | Joint Secretary | 92446 84702 |
| **EC Members** | **Team-Chairmen** | **Contact** |
| V.G. Ramdoss | International Affairs | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | Administration | 90809 51577 |
| S.G. Srinivasan | Greetings | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Public Relation | 93441 52068 |
| A.R. Ganesan | Cultural & Food | 98421 75804 |
| B.S. Janaarthanan | Members Liason | 97905 75650 |
| G.R. Subramanian | Membership Retain | 94427 52044 |
| T.K. Sivanath Babu | Growth & Development | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | Bulletin | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | Political Affair | 98655 45048 |
| N.S. Prem Kumar | Govt. Relation | 99945 35350 |
| K.K. Dinakaran | Building & Fund Raising | 98409 60833 |
| K.V. Kumaresan | Entertainment | 98940 51735 |
| S.S. Ramsundar | Publicity | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | Social Media | 94422 44648 |
| T.M. Rubesh Babu | Program | 95000 35200 |
| S.S. Premkumar | IT | 96293 42295 |
| S.R. Sundarnath | Community Relation | 92444 03917 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| S.M. Karthi Kumaran | Chairman | 94438 31496 |
| K.B. Sivaprakash Babu | Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | Member | 99524 22260 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- K.K. குபேந்திரன்

**11.10.2023** – ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் 12வது செயற்குழு கூட்டம் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.

**14.10.2023** – வெனிசுலா குடியரசு நாட்டின் இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ள நம் சமூகத்தைச் சேர்ந்த ஸ்ரீ. பி.கே. அசோக் பாபு அவர்களை கௌரவிக்கும் கூட்டத்திற்கு நமது சேம்பர் இணைந்து செயல்பட்டது. பி.வி.கே. குழுமம் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தது.

**16.10.2023** – தமிழ்நாடு தொழில்துறை மின்நுகர்வோர் கூட்டமைப்பின் சார்பாக மின் கட்டண உயர்வை ரத்து செய்யக்கோரி சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உண்ணாவிரதப் போராட்டத்தில், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகள் மற்றும் அங்கத்தினர்கள் பங்கேற்றனர்.

**20.10.2023** – நமது சேம்பர் உறுப்பினர், எஸ்.ஆர்.பி., சில்கஸ் நிறுவனத்தாரின் புதிய கிளைத் திறப்பு விழாவிற்கு சேம்பர் நிர்வாகிகள் & செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**31.10.2023** – வணிகர்களுக்கான சமாதானத் திட்ட விழிப்புணர்வு கூட்டம் தமிழக அரசின் வணிகவரித்துறை சார்பாக மதுரையில் ஏற்பாடு செய்திருந்தது. பத்திரப் பதிவுத்துறை & வணிகவரித்துறை அமைச்சர் திரு. பி. மூர்த்தி அவர்கள் தலைமைத்தாங்கிப் பேசினார். இந்த கூட்டத்திற்கு சேம்பர் நிர்வாகிகள் & அங்கத்தினர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

### விரைவில் இடம் மாற்றம்

**நமது**
**ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்**
**அலுவலகம்**
**விரைவில் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றம் செய்ய இருக்கிறது**

புதிய முகவரி 161F – சாலை பிள்ளையார் கோவில் தெரு,
காமராஜர் சாலை,
அருணாச்சலம் கமலாம்பாள் அரங்கம் அருகில்
மதுரை – 625009

விரைவில் இடம் மாற்ற தேதி அறிவிக்கப்படும்



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- S.M. கார்த்தி குமரன்

*பெண்கள் சக்தி...*

திருமணம் வேண்டாம் என்று பல வருடங்களாக சொல்லும் நண்பர் கிருஷ்ணனை சந்திக்க சென்றார் நண்பர் ராமன். வழக்கம் போல் இந்த முறையும் திருமண பேச்சு எடுத்த போது வேண்டாம் என்று கூறினான்.

ராமன் கூறினான், “நமக்குள் ஒரு போட்டி, நீ என்னை தூக்க வேண்டும்” என்றான்.

“தூக்குகிறேன்” என்று கிருஷ்ணன் ராமனை தூக்கினான்.

ராமன் கூறினான், “சரி, என்னை தூக்கிவிட்டாய் நீ நியாக தூக்கிக் கொள்” என்றான்.

“அது எப்படி முடியும். எனக்கு ஒரு துணை வேண்டும். அதை பிடித்து என்னை தூக்கிக் கொள்வேன்” என்றான் கிருஷ்ணன்.

அதற்கு ராமன் சொன்னான், “அது போலத் தான் வாழ்க்கை. வாழ்வதற்கு ஒரு துணைவி வேண்டும் அவள் கைபிடித்து நீ வாழ எந்த உயரத்திற்கும் நீ செல்லலாம்” என்று ராமன் கூறினான்.

கிருஷ்ணன் உணர்ந்தான்; மணம் முடிந்தான்; உயர்ந்தான்

பெண்கள், ஆண்கள் முன்னேற்றத்திற்கு மட்டுமல்ல, நாட்டின் முன்னேற்றத்திற்கும் மிகப்பெரிய உந்து சக்தி. இதை அடிப்படையில் ஒவ்வொரு ஆணும் / நாடும் உணர வேண்டிய தத்துவம்.

மத்திய அரசு தற்போது மகளிருக்கு 33% இட ஒதுக்கீட்டை அமல்படுத்தியுள்ளது. வரவேற்கத் தக்க முடிவு. பெண்களை உயர்த்திப் பிடித்துச் செல்வதில் பாரத தேசம் ஒரு முன்னோடி நாடாகும். இதனை நம் இந்து மதத்தில், ஆணும் பெண்ணும் சமம் என்ற புரிதலை மானுட வர்க்கத்திற்கு எடுத்துக்காட்டவே சிவ பெருமான் தன்னில் பாதி பார்வதி தேவியுடன் காட்சி தருவதன் மூலம் நெடுங்காலப் பழமையை உணரலாம்.

அடுத்த 25 ஆண்டுகால புதிய இந்தியாவை உருவாக்குவதில் பெண்களின் பங்களிப்பு 33% அளிக்கப்பட்டுள்ளது. பாரதத்தின் நூற்றாண்டில், நாடு நிச்சயம் முன்னேற்றம் அடைந்திருக்கும் என்பதை மேற்படி கதையின் மூலம் நம்பிக்கை பிறக்கும்.

Exclusive Showroom for U'r Branded Products
IDEAL innerwear
ANAND
Viking
Prithvi INNER WEARS
NAIDU HALL THE FAMILY STORE
JOCKEY INNER WEAR
Poomex
MANGAI NIGHTIES
RASATHE DARLING NIGHTIES
YOKE'S NIGHTY
& All Branded Innerwears for All
Online Purchase for any Items Call 98941 41402 payments by
Save Your Valuable Time, Money & Healthy Life.
G Pay PhonePe
THE BABY SHOP
அலங்கார் தி பேபி ஷாப்
உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402

*Best Compliments from*

## BVK GROUP

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

4th Floor (NW), Kothari Building, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.
No.603, Keshava - BKC, Mumbai - 400 051.

# உலகில் வேகமாக வளரும் இந்தியப் பொருளாதாரம்

கொரோனா பெருந்தொற்று, ரஷ்யா – உக்ரைன் போர் போன்ற காரணங்களால் வளர்ந்த நாடுகள் உள்பட பல்வேறு உலக நாடுகள் பொருளாதார நெருக்கடியால் திணறி வருகின்றன. இந்தச் சூழலில் இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பி இருக்கிறது. கடும் சவால்களுக்கு மத்தியிலும் உலகிலேயே வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா விளங்குகிறது.

**இந்தியப் பொருளாதாரம் கடந்து வந்த பாதை :** இந்தியர்கள் பொதுவாகச் சேமிக்கும் பழக்கம் கொண்டவர்கள். இது அவர்களுடைய தனிப்பட்ட பொருளாதார நிலையை உயர்த்தினாலும், இந்தியப் பொருளாதார வளர்ச்சி, ஸ்திரத்தன்மைக்கு அடித்தளமாக விளங்குகிறது. அதனால்தான் சர்வதேச மந்தநிலைக்கு நடுவிலும் இந்தியப் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படவில்லை. எனவே, இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு மத்திய அரசின் கொள்கைகள் காரணமாக இருந்தாலும், பொதுமக்களின் சேமிக்கும் பழக்கமும் ஒரு முக்கியக் காரணம் எனப் பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த 2014-ல் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றது. இறக்குமதியைக் குறைக்கும் நோக்கில் மேக்-இன்-இந்தியா என்கிற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் மூலம் அந்நியச் செலவாணி மிச்சமாகும் என அரசு கருதியது. பல்வேறு வகையான வரி நடைமுறைகளை மாற்றி ஜி.எஸ்.டி., அமல்படுத்தப்பட்டது. ஸ்டார்ட்-அப் இந்தியா, முத்ரா கடன், உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத் தொகை திட்டம் எனத் தொழில் துறையை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்கள் அமல்படுத்தப்பட்டன. அந்நியச் செலாவணியில் முக்கியப் பங்கு வகிக்கும் கச்சா எண்ணெய் இறக்குமதியைக் குறைக்க மின்சார வாகனங்களை ஊக்குவிக்க மத்திய அரசு முடிவு செய்தது.

இதன்படி மின் வாகனங்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டது. மேலும் நம் நாட்டைப் பொறுத்தவரை ராணுவத் தளவாடங்களைப் பெருமளவில் இறக்குமதி செய்து வருகிறோம். இதைக் குறைப்பதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதனால் வெளிநாட்டு ராணுவத் தளவாட உற்பத்தி நிறுவனங்கள் இந்தியாவில் உற்பத்தியைத் தொடங்க முன்வந்துள்ளன. இதுபோன்ற நடவடிக்கைகளால் நாட்டின் ஏற்றுமதி அதிகரிக்கும் என மத்திய அரசு கருதுகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாக உள்ளது. இந்த நிலையை மாற்றி இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியை அதிகரிக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

**கொரோனா பாதிப்பு:** மத்திய அரசின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு இடையே தான் 2019 இறுதியில் சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு தென்பட்டது. இப்பாதிப்பு உலகம் முழுவதும் பரவத் தொடங்கியதையடுத்துப் பொது முடக்கம் அமல்படுத்தப்பட்டது. இதனால் ஓராண்டுக்கும் மேலாக உலகம் முழுவதும் அனைத்து வகை போக்குவரத்தும் முடங்கின. தொழிற்சாலைகள், அலுவலகங்கள் மூடப்பட்டன.

இதனால் உலகம் முழுவதும் மீண்டும் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டது. லட்சக்கணக்கானோர் வேலையிழந்தனர். இந்தியா உள்பட பெரும்பாலான நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. உலக நாடுகளின் சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.1% ஆக சரிந்தது. இந்தியாவின் ஜி.டி.பி., -6.6% ஆகப் பதிவானது.

**ரஷ்யா - உக்ரைன் போர் :** 2021 பிற்பாதியில் கொரோனா தாக்கம் குறைந்தது உலகம் முழுவதும் இயல்புநிலை திரும்பியது. இந்தச் சூழலில் 2022 பிப்ரவரியில் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. ஓராண்டுக்கும் மேலாக நீடிக்கும் இந்தப் போரில் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கி வருகின்றன. ரஷ்யாவின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்தது.

இப்போர் காரணமாக ரஷ்யா, உக்ரைன் நாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்வது தடைப்பட்டது. பல்வேறு நாடுகளில் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால், இந்தியா உள்பட உலகம் முழுவதும் பணவீக்கம் கடுமையாக அதிகரித்தது. கடந்த ஆண்டில் சர்வதேசப் பணவீக்கம் 8.7 சதவீதமாக அதிகரித்தது. இதைக் கட்டுப்படுத்த உலக நாடுகளின் மத்திய வங்கிகள் கடன் வட்டியை அதிகரித்தன.

இதன் காரணமாக, அமெரிக்கா உள்ளிட்ட பெரும்பாலான நாடுகள் இன்னமும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள முடியாமல் திணறி வருகின்றன. நம்முடைய அண்டை நாடுகளான இலங்கை, பாகிஸ்தானிலும் எரிபொருள், உணவுப்பொருள்களின் விலை உயர்ந்து கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பணவீக்கம் அதிகரிப்பு, கடன் வட்டி உயர்வால் அமெரிக்காவில் சில வங்கிகள் திவால் நிலைக்குச் சென்றன. கடன் அளவு உச்சவரம்பை மீறியதால், கடந்த மே மாதம் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலையும் ஏற்பட்டது. இதையடுத்து, கடன் உச்ச வரம்பை அதிகரிக்க அந்நாட்டு நாடாளுமன்றம் அனுமதி அளித்தது. இதையடுத்து அங்கு நிலைமை சீரடைந்தது.

உலக நாடுகளின் சராசரிப் பொருளாதார வளர்ச்சி 2022ல் 3.5% இருந்தது. இது 2023-24ல் 3% குறையும் என சர்வதேச நாணய நிதியம் (International Monetary Fund - IMF) கணித்துள்ளது. இதுபோல் சர்வதேசப் பணவீக்கம் நடப்பாண்டில் 6.8% குறையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் அமெரிக்காவின் பொருளாதாரம் 1.5%, சீனா 5.2%, ஜப்பான் 1.4%, ஜெர்மனி -0.3% ஆக இருக்கும் என்றும் சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.

**5வது பெரிய பொருளாதாரம் :** உலக நாடுகள் கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள போதிலும், இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பியுள்ளது. உலக அளவில் வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. இந்த ஆண்டில் உலக அளவில் ஜிடிபி அடிப்படையில் பெரிய பொருளாதார நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனிக்கு அடுத்தபடியாக இந்தியா 5ம் இடத்துக்கு முன்னேறி உள்ளது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு மதிப்பு 3.75 லட்சம் கோடி டாலராகி (ரூ. 311 லட்சம் கோடி) உள்ளது. 5ம் இடத்தில் இருந்த பிரிட்டன் 6ம் இடத்துக்குப் பின்தங்கி உள்ளது.

2021-22 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு மதிப்பு 9.1%. இது 2022-23 நிதியாண்டில் 7.2% ஆக பதிவானது. இது சர்வதேச நிதி அமைப்புகளின் கணிப்பை விட அதிகம். நடப்பு 2023-24 நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு மதிப்பு 7.8% வளர்ந்துள்ளது. இது நடப்பு 2023-24 நிதியாண்டில் 6.5% ஆக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பொருளாதார வளர்ச்சி இதே வேகத்தில் சென்றால் 2030க்குள் ஜெர்மனி, ஜப்பானைப் பின்னுக்குத் தள்ளி உலகின் பெரிய பொருளாதார நாடுகள் பட்டியலில் 3ம் இடத்துக்கு முன்னேறும் எனப் பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர்.

– இந்து (கு)

# இந்தியாவின் தலைமையில் ஜி20 உச்சி மாநாடு

## இந்தியாவிற்கான மாற்றத்தின் தருணம்

இந்தியாவின் ஜி20 தலைமை பொறுப்பு 2022 டிசம்பர் 1, அன்று தொடங்கியது. செப்டம்பர் 9 முதல் 10ம் தேதி வரை நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க புதுடெல்லி உச்சிமாநாடு, நாட்டின் மிகப்பெரிய நிகழ்வாக மாறியது. நம் நாட்டின் ஆற்றலைக் கண்டு உலகமும் வியப்படைகிறது.

ஜி-20 என்பது உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 85 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருளாதார வலிமையைக் கொண்ட நாடுகளின் குழுவாகும். ஜி-20 என்பது 19 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவாகும். இதில் இந்தியா ஒரு பெரிய அத்தியாத்தை சேர்த்துள்ளது.

இந்த அமைப்பு உலகில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 85 சதவீதத்தையும், உலக வர்த்தகத்தில் 75 சதவீதத்தையும், உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கையும் கொண்டுள்ளது. இப்போது, ஆப்பிரிக்க ஒன்றியத்தை சேர்ப்பதன் மூலம், இந்த உலகளாவிய அமைப்பிற்கு இந்தியா ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளது.

இந்தியாவின் தலைமையில் நடைபெற்ற உச்சி மாநாடு அதன் பிரமாண்டத்திற்காக மட்டுமல்ல, மனிதனை மையமாகக் கொண்ட கொள்கை முன்முயற்சிகளுக்காகவும் தனித்துவமான மாநாடாக மாறியுள்ளது. உலகின் சக்தி வாய்ந்த நாடுகளின் தலைவர்கள் மற்றும் அவர்களது நாடுகளை சேர்ந்த பிரிதிநிதிகளை வரவேற்பது உட்பட, பாதுகாப்பு ஏற்பாடுகள் முதல் பரிசுகள் மற்றும் உணவுகளைத் தேர்ந்தெடுப்பது வரை, ஒவ்வொரு விஷயத்திலும் இந்தியாவின் இணையற்ற வலிமையை உலகம் கண்டது.

உண்மையில், **வசுவதைவ குடும்பகம்** என்ற இரண்டு வார்த்தைகள் இந்திய கலாச்சாரத்தில் இருந்து ஆழமான தத்துவார்த்த கருத்தைக் கொண்டுள்ளன. இதன் பொருள் **உலகம் ஒரே குடும்பம்** என்பதாகும். இது ஒரு உலகளாவிய குடும்பத்தின் முன்னேற்றத்தை ஆதரிக்கும் ஒரு பரந்த அணுகுமுறையாகும்.

இந்தியாவின் தலைமையில் நடைபெற்ற ஜி-20 உச்சிமாநாட்டின் போது இந்த மையப்பொருள் மனிதனை மையமாகக் கொண்ட முன்னேற்றத்திற்கான கோரிக்கையாக வெளிப்பட்டது.

கோவிட் பாதிப்பிற்குப் பிறகு, இந்தியா மூன்று பகுதிகளுக்கு முக்கியத்தும் அளித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியை மையமாகக் கொண்ட அணுகுமுறையிலிருந்து மனிதத் தன்மை கொண்ட வளர்ச்சியை நோக்கி செல்வதே முதல் படியாகும். இரண்டாவதாக, உலகளாவிய விநியோக தொடர்புகளில் வலுவான அங்கீகாரம் மற்றும் நம்பகத்தன்மையின் முக்கியத்துவம், முன்றாவதாக, உலகளாவிய நிறுவன சீர்திருத்தத்தின் மூலம் பன்முகத்தன்மையை நோக்கி செல்வதற்கான ஒரு கூட்டமாக விடுக்கப்பட்ட அழைப்பு.

இந்தியாவின் தலைமையின் கீழ், இந்த முன்னேற்றங்களுக்கு ஒரு உந்துசக்தியாக ஜி20 செயல்பட்டது. இதைக் கருத்தில் கொண்டு, இந்தியா உலகளாவிய தெற்கின் குரலாக இந்த உச்சி மாநாட்டை நடத்தியது.

இந்த நிகழ்வில் மொத்தம் 125 நாடுகள் பங்கேற்றன. ஜி20ல் பெண்களை மையமாக கொண்ட வளர்ச்சிப் பிரச்சினையை இந்தியா முன்வைத்துள்ளது. ஜி20 நாடுகள் அதை ஏற்றுக்கொண்டன. மாநாட்டில், **ஒரே உலகம், ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்** என்று உலகுக்குச் சொல்லப்பட்டு, இந்தியாவும் இந்தச் சிந்தனையில் முன்னேறி வருகிறது.

இந்த மாநாட்டில் 112 முடிவுகள் மற்றும் தலைமை ஆவணங்களுடன், இந்தியா முந்தைய தலைமை பதவியை விட இரண்டு மடங்கு அதிகமான பணிகளை செய்துள்ளது. பொருளாதாரம், புவிசார் அரசியல் மற்றும் தொழில்நுட்பம் போன்ற பல முக்கிய உலகளாவிய தலைப்புகளில் முழு உலகையும் ஒரே தளத்தில் கொண்டு வர இந்தியா உழைத்தது. இத்தகைய மாதிரி, ஸ்திரத்தன்மை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, வளத்தை பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. மனிதகுலத்தின் கூட்டு நல்வாழ்வில் இந்தியாவின் நிலையை நிலைநிறுத்தியது.

இந்த மாநாடு இந்தியாவின் ராஜதந்திர அத்தியாயத்தில் ஒரு முக்கியமான மைல்கள் என்று அழைக்கப்படுகிறது. இது இந்தியாவிற்கான மாற்றத்தின் தருணம் என்பதை உலகமும் உடனடியாக ஏற்றுக்கொண்டுள்ளது.


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Prof. Dr. M.V. SUBBURAMAN
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

Cell: 90805 54802, 99424 90217
Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

## கடன் முடிந்ததும் அசல் ஆவணங்களை 30 நாட்களுக்குள் திருப்பித் தர வேண்டும்

*வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி உத்தரவு*

கடன் முடிந்ததும் அசல் ஆவணங்களை 30 நாட்களுக்குள் திருப்பித் தர வேண்டும் என்று வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் அடங்கிய சுற்றறிக்கையை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.

அதன் விபரம், அசையும் அல்லது அசையா சொத்துகளின் பேரில் கடன் வாங்கியவர்கள், கடனை முழுமையாக திருப்பிச் செலுத்திய 30 நாட்களுக்குள் அவர்களது அசல் ஆவணங்களை அவர்களிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டும்.

வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக கடந்த 2003-ம் ஆண்டில் இருந்து ரிசர்வு வங்கி வெளியிட்டு வரும் உத்தரவுகளில் இதுவும் அடங்கும்.

கடனை முழுமையாகச் செலுத்தியவர்களுக்கு அவர்களின் ஆவணங்களை திருப்பிக் கொடுப்பதில் வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் வேறுபட்ட நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன. இதனால் வாடிக்கையாளர்கள் பல்வேறு சிக்கல்களையும் துயரங்களையும் எதிர்கொள்கின்றனர்.

கடன் வாங்குபவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் மத்தியில் பொறுப்பான கடன் வழங்கும் நடத்தையை மேம்படுத்துவதற்கும் இத்தகைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது அவசியம்.

கடன் முடிந்ததும், அசல் ஆவணங்களை திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறைகள் பற்றி வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். ஆவணங்கள் திரும்பப் பெறுவதற்கான காலக்கேடு, இடம், ஆகியவை கடன் அனுமதி கடிதங்களில் குறிப்பிடப்பட்ட வேண்டும்.

தனி நபர் கடன் அல்லது கூட்டுக் கடன் என எதுவாக இருந்தாலும், ஆவணங்களை திருப்பித் தருவதற்கான நன்கு திட்டமிடப்பட்ட நடைமுறையை வங்கிகளும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களும் கொண்டிருக்க வேண்டும். இதனை வங்கிகள் தங்கள் இணையதளத்தில் வெளியிட்டு, வாடிக்கையாளர்கள் அறியும்படிச் செய்ய வேண்டும்.

## கைவினைக் கலைஞர்களுக்கு

## *மத்திய அரசின்* விஸ்கர்மா திட்டம்

ஒட்டுமொத்த உலகை உருவாக்குபவர் அல்லது அதனுடன் தொடர்புடைய கட்டமைப்பு பணிகளில் ஈடுபடுபவர், விஸ்வகர்மா என்று அழைக்கப்படுவார்.

பல ஆயிரம் ஆண்டுகளாக இந்தியாவின் வளமான அடித்தளத்தை அமைத்துள்ள இத்தகைய தோழர்கள், நமது விஸ்வகர்மாக்களாக திகழ்கின்றனர்.

நமது உடலில் முதுகெலும்பு எவ்வளவு முக்கியமோ, அதேபோல நமது சமூக வாழ்வில் இவர்களைப் போன்ற விஸ்வகர்மாக்கள் மிக முக்கிய பங்காற்றி வருகின்றனர். நமது அன்றாட வாழ்வில் இன்றியமையாததாக உள்ள பணிகள் மற்றும் திறன்களுடன் நமது விஸ்வகர்மா தோழர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர்.

இந்த உணர்வோடு, பாரம்பரிய கைவினைத் தொழில்களில் ஈடுபடும் மக்களுக்கு உதவிகள் வழங்க மத்திய அரசு முன்னுரிமை அளித்துள்ளது.

கடந்த செப்டம்பர் 17ம் தேதி பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தை பாரதப்பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அறிமுகப்படுத்தினார். கைத்திறன் மற்றும் கைத்தொழில் கருவிகளை பாரம்பரியமாக சார்ந்து இருக்கும் லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு இத்திட்டம் புதிய நம்பிக்கை ஒளியாக அமைந்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வசிக்கும் கைவினைக் கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு பிரதமரின் விஸ்வகர்மா திட்டம் உதவி அளிக்கும். இந்தத் திட்டத்தின் கீழ் 18 பாரம்பரிய கைவினைத் தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

அதன்படி,

- தச்சர்,
- படகு தயாரிப்பாளர்
- கவசம்
- கொல்லர்
- கத்தி மற்றும் கருவிகள் செய்பவர்
- பூட்டு செய்பவர்
- பொற்கொல்லர்
- குயவர், சிற்பி, கல் உடைப்பவர்
- காலணிகள் தைப்பவர்
- கொத்தனார்
- கூடை, பாய், துடைப்பம் தயாரிப்பவர்
- கயிறு திரிப்பவர்
- பொம்மை மற்றும் விளையாட்டுப் பொருட்கள் தயாரிப்பவர் (பாரம்பரியம்)
- முடி திருத்துபவர்
- மாலை தயாரிப்பவர்
- சலவைத் தொழிலாளி
- தையல்காரர்
- மீன்பிடி வலை தயாரிப்பாளர்.






தொழில்துறையினருக்கான மின் கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரி பல்வேறு வழிகளில் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் முயற்சியில் தமிழ்நாடு தொழில்துறை மின் நுகர்வோர்கள் கூட்டமைப்பு 16.10.2023 அன்று சென்னையில் ஏற்பாடு செய்த மாபெரும் உண்ணாவிரத போராட்டத்தில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தொழில் முனைவோர்கள் மற்றும் தொழில் சங்கங்கள் கலந்து கொண்டன.
இந்தப் போராட்டத்தில், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் சார்பாக நிர்வாகிகள் மற்றும் அங்கத்தினர்கள் கலந்து கொண்டு ஆதரவளித்தனர்.




வெனிசுலா நாட்டின் இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ள நம் சமூகத்தைச் சேர்ந்த ஸ்ரீ. P.K. அசோக் பாபு IFS அவர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சி 14.10.2023 அன்று மதுரையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை BVK Groups ஏற்பாடு செய்தது.
5 வகையறா டிரஸ்ட், ஸௌராஷ்ட்ர சேம்பர் & நெக்ஸ்ட்ஜென் இணைந்து நடத்தியது.
திரு. T.V. ஓம்நாத் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.
BVK Groups Chairman திரு. குட்டி பாலா அவர்கள் தலைமை உரையாற்றினார்.
கூட்டத்தில், கலை நிகழ்ச்சிகள் & சிறந்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.
ஸ்ரீ. P.K. அசோக்பாபு அவர்களுக்கு நினைவுப்பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
தொடர்ந்து ஸ்ரீ. P.K. அசோக் பாபு அவர்களை சமூக முக்கிய பிரமுகர்கள் கௌரவித்தனர்.
ஸௌராஷ்டர் சேம்பர் நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தது.



சேம்பர்-ன் அக்டோபர் மாத லாப் ஸமாச்சார் இதழ், மீராகுஞ்ச் பாலிமர்ஸ் பி.லிட்., திரு. கே.டி. தினகரன் பாபு அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது.
இதழுக்கு தொடர்ந்து விளம்பரம் அளித்து ஆதரவளித்து வரும் இந்நிறுவனத்தாரை கௌரவிக்கும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
விளம்பரம் மட்டுமல்லாது, சேம்பர்-ன் முக்கிய நிகழ்வுகளுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் இந்நிறுவனம் தலைமுறைகளை கடந்து வெற்றிநடை போட ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துகிறது.




தமிழ்நாடு வணிகவரித்துறையின் மூலம் மதுரை மாவட்டம் துவாரகா மகாலில் வணிகர்களுக்கான சமாதானத் திட்டம் 2023 விழிப்புணர்வு மற்றும் திட்ட விளக்கக் கூட்டம் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி. மூர்த்தி அவர்கள் தலைமையில் 31.10.2023 அன்று நடைபெற்றது.
இந்தக் கூட்டத்திற்கு கலந்து கொள்ள நமது சேம்பருக்கு அழைப்பு வந்தது.
இதில் கலந்துகொள்ள நமது சேம்பர் அங்கத்தினர்களுக்கும் செய்தி அனுப்பப்பட்டது. இந்த கூட்டத்தில் நமது சேம்பர் நிர்வாகிகள் கலந்த கொண்டனர்.

ஸ்ரீ முருகன் துணை
K.S. மோகன்லால்

ஹரிலால்
பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்
குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்

98430 72626
98425 72626
* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்
No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை - 9

# சமாதானத் திட்டம் 2023

இந்த திட்டம் வணிகர்களின் நலனுக்காக கொண்டு வரப்பட்டது. 31.03.2021 அன்று அல்லது அதற்கு முன் பிறப்பிக்கப்பட்ட வரிவிதிப்பு ஆணைகளின் வரி, அபராதம் அல்லது வட்டி நிலுவைத் தொகையைத் தீர்வுகாணச் செய்தல் இதன் நோக்கமாகும். மேல்முறையீடு நிலுவை இருப்பின் வழக்கை வாபஸ் பெற வேண்டும்.

இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறும், பணம் செலுத்தியதற்கான ஆதாரம் மற்றும் வரிவிதிப்பு ஆணை அல்லது கேட்பு அறிவிப்பு போன்ற இதர ஆவணங்களுடன் இணை ஆணையர் (மாவட்ட), மதுரை கோட்டம் அவர்களுக்கு படிவம் I-ல் இணைய வழியாக நான்கு மாதங்களுக்குள் (16.10.2023 முதல் 15.02.2024 வரை) ஆன்லைன்-ல் விண்ணப்பித்து, அதன் கையொப்பமிடப்பட்ட அச்சு நகலினை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ ஆன்லைன்-ல் விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களுக்கு இதில் ஏதேனும் விளக்கமோ அல்லது மேற்கொண்டு தகவலோ தேவையிருப்பின் இவ்வலுவலக சமாதானத்திட்ட உதவி மையத்தை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வரி நிலுவை ரூ.50000/- மற்றும் அதற்கு கீழ் வரை | வரி, தண்டம் மற்றும் வட்டி ஆகியவை தள்ளுபடி செய்யப்படுகிறது. | | |
| 2 | வரி நிலுவை ரூ. 50001/- முதல் ரூ. 10,00,000 வரை விருப்பம் - 1 | | | |
| | நிலுவை வரித்தொகையில் (வரி, தண்டம், வட்டி) செலுத்த வேண்டிய தொகை 20% சமாதானத்திட்டம் 2023கீழ் செலுத்த வேண்டும். | 80% வரி தண்டம் மற்றும் வட்டி ஆகியவை தள்ளுபடி செய்யப்படுகிறது. | | |
| | அல்லது | | | |
| | விருப்பம் - 2 | செலுத்த வேண்டிய வரி | செலுத்த வேண்டிய தண்டம் | செலுத்த வேண்டிய வட்டி |
| | ஏற்றுக்கொள்ளப்பட்ட கேட்பு வரித்தொகையாக இருப்பின் (Admitted Demand) | 66% | 10% | 10% |
| | சர்சைக்குரிய கேட்பு வரித்தொகையாக இருப்பின் (Disputed Demand) | 33% | 10% | 10% |
| | வட்டி அல்லது தண்டம் அல்லது இரண்டும் (வரி அல்லாது) | இல்லை | 10% | 10% |
| 3 | ரூ. 10,00,000/- முதல் ரூ. 1,00,00,000/- வரை | செலுத்த வேண்டிய வரி | செலுத்த வேண்டிய தண்டம் | செலுத்த வேண்டிய வட்டி |
| | ஏற்றுக்கொள்ளப்பட்ட கேட்பு வரித்தொகையாக இருப்பின் (Admitted Demand) | 66% | 10% | 10% |
| | சர்சைக்குரிய கேட்பு வரித்தொகையாக இருப்பின் (Disputed Demand) | 33% | 10% | 10% |
| | வட்டி அல்லது தண்டம் அல்லது இரண்டும் (வரி அல்லாது) | இல்லை | 10% | 10% |
| 4 | ரூ. 10,00,001/- முதல் ரூ. 10 கோடி வரை | செலுத்த வேண்டிய வரி | செலுத்த வேண்டிய தண்டம் | செலுத்த வேண்டிய வட்டி |
| | ஏற்றுக்கொள்ளப்பட்ட கேட்பு வரித்தொகையாக இருப்பின் (Admitted Demand) | 75% | 15% | 20% |
| | சர்சைக்குரிய கேட்பு வரித்தொகையாக இருப்பின் (Disputed Demand) | 50% | 15% | 20% |
| | வட்டி அல்லது தண்டம் அல்லது இரண்டும் (வரி அல்லாது) | இல்லை | 15% | 20% |
| 5 | ரூ. 10 கோடிக்கு மேல் | செலுத்த வேண்டிய வரி | செலுத்த வேண்டிய தண்டம் | செலுத்த வேண்டிய வட்டி |
| | ஏற்றுக்கொள்ளப்பட்ட கேட்பு வரித்தொகையாக இருப்பின் (Admitted Demand) | 90% | 15% | 30% |
| | சர்சைக்குரிய கேட்பு வரித்தொகையாக இருப்பின் (Disputed Demand) | 60% | 15% | 30% |
| | வட்டி அல்லது தண்டம் அல்லது இரண்டும் (வரி அல்லாது) | இல்லை | 15% | 30% |

சமாதான திட்டத்தின் கீழ் பணம் செலுத்தும் நாளது வரை திரள் வட்டி முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும்

# சமாதான் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

புதிய சமாதான் திட்டம் தமிழக அரசால் அரசாணை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்டம், விதிகள், படிவங்கள் நடைமுறைகள் அக்டோபர் 12, 2023 கெஜட்டில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த சமாதான் திட்டத்தின் சில முக்கிய அம்சங்கள் கீழ்க்கண்டவாறு.

★ தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இருந்த அனைத்து indirect tax வரி விதிப்பின்படி பாக்கி உள்ள இனங்கள் சமாதான் திட்டம் 2023ல் சேர்க்கப்பட்டுள்ளன. (CST. TNGST, SC, AST, Luxury Tax, Entertainment Tax, Entry Tax..)

★ இந்த திட்டத்தின் படி மேற்கண்ட வரி இனங்கள் 31.03.2021க்கு முன்பு பாக்கி ஏற்பட்டு இருக்க வேண்டும். 31.03.2021க்கு பின்பு ஏற்பட்ட வரி பாக்கி இனங்கள் இந்த திட்டத்தில் சேர முடியாது.

★ இந்த திட்டத்தில் ஜிஎஸ்டி வரி விதிப்பு பாக்கிகள் அடங்காது.

★ மேற்படி இனங்களின் வரி பாக்கிகள் Appeal, Revision, Review (Appellate Authority, Tribunal or Court) வழக்குகள் நிலுவையில் இருந்தால் சேர்ந்துக் கொள்ளலாம்.

★ வணிகர்கள் Appeal தாக்கல் செய்து அதில் வெற்றி பெற்றபிறகு அரசால் மேல்முறையீடு செய்து வழக்கு நிலுவையில் இருந்தாலும் இந்த திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

★ பக்கம் 10ல் இடம்பெற்றுள்ள அட்டவணைப்படி வரி, தண்டம், வட்டிக்கு இந்த திட்டத்தில் எத்தனை சதவீதம் செலுத்த வேண்டும் என வழங்கப்பட்டுள்ளது.

★ இந்த திட்டம் 16.10.2023 முதல் அமலுக்கு வந்துள்ளது. 15.02.2024 வரை அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

★ இந்த திட்டத்தில் சேர வேண்டுமானால் ctd.tn.gov.in என்ற இணைய தளத்தில் சமாதான் திட்டத்திற்காகவே பிரத்தியேகமாக பதிவு செய்து அதன் மூலமாக தான் சமாதான் விண்ணப்பம் தாக்கல் செய்ய வேண்டும்.

★ ஒவ்வொரு வருட வரி விதிப்பிற்கும் தனித்தனியாக விண்ணப்பம் தாக்கல் செய்ய வேண்டும்.

★ இந்த திட்டத்தில் தாக்கல் செய்த விண்ணப்பம் ஏதும் Reject செய்யப்பட்டால் அதன் மீது மேல் முறையீடு செய்ய வழிவகை வழங்கப்பட்டுள்ளது.

★ இந்த திட்டத்தில் வரி, தண்டம், வட்டி ஆகியவற்றை ஆன்லைன் மூலமாகவே செலுத்த வேண்டும்.

★ இந்த திட்டத்தில் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பம் அதிகாரியால் சரிபார்க்கப்பட்டு 90 நாட்களுக்குள் Settlement of Certificate வழங்கப்படும்.

